# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102024

1. District : ஈ.ரோடு மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு, ஈரோடு காவல்நிலையம் | Year: 2018 ஆண்டு | FIR No: 4/AC/2018 மு.த.அ. எண் | Date: 23.08.2018 நாள்

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988, as - | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: amended by the P.C - | Sections பிரிவுகள்: -
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018. | Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : — குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல்: 14.8.2018 / 13.00 மணி | Date to நாள் வரை: 18.8.2018 / 12.30 மணி, 21.8.2018 / 13.00 மணி
Time Period நேர அளவு : — | Time from நேரம் முதல் : | Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 23.8.2018 | Time நேரம் : 14.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: VOL - III | Time நேரம் : 23.8.2018 / 14.30 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துபூர்வமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 60 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : — முறைக், காவல் எண் | (b) Address முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், நம்பியூர் 'ஆ' கிராமம், நம்பியூர் தாலுக்கா ஈ.ரோடு மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: பெ.சந்திரவேல் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: பெரியசாமிகவுண்டர் L.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: வயது 30/2018 | (d) Nationality : நாட்டினம்: இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : — வழங்கப்பட்ட நாள் | Place of Issue : — வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில்: மளிகை வியாபாரம், மற்றும் ஸ்டேஷனரி வேலை | (g) Address : முகவரி 11/250 கோவில்காட்டு தோட்டம், காரப்பாடி, கரட்டுபாளையம், கோபி 638457.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. சுபாஷ்குமார், முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், கரட்டுப்பாளையம் 'ஆ' கிராமம், தற்போது கிராம நிர்வாக அலுவலர் நம்பியூர் 'ஆ' கிராமம், நம்பியூர் தாலுக்கா, ஈ.ரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தாமதமில்லை,

GCP-240-34(Type-2) 90.000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) ——

10. Total value of properties stolen / involved : ——
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ——
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : ——
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது:-

விபரம் தனித்தாளில் கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………-……… Rank ………-……… to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………—………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M.நடராஜன் பதவி காவல் ஆய்வாளர் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு உ.நா.க.பிரிவு, ஈரோடு காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கோடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant (signed) 23.8.2018
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station (signed) 23.8.18
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.8.2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 19.30 மணி

Name: பெயர் M.நடராஜன்
Rank: நிலை காவல் ஆய்வாளர்
உ.நா.க.பிரிவு, ஈரோடு.

* GCP-246-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**Attachment to Column 12 of FIR in Erode V & AC Cr.No. 4/AC/2018 u/s 7 of PC Act, 1988, as amended by the PC(Amendment) Act 2018.**

சமர்ப்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர், M.நடராஜன் ஆகிய நான் 23.08.2018 ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது, பெ.சக்திவேல், த/பெ பெரியாக்கவுண்டர், 11/250, கோவில்காட்டு தோட்டம், காராப்பாடி, கரட்டுப்பாளையம், கோபி 638457 என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு :-

அனுப்புநர், பெ.சக்திவேல், த/பெ பெரியாக்கவுண்டர், 11/250, கோவில்காட்டு தோட்டம், காராப்பாடி, கரட்டுப்பாளையம், கோபி 638457. பெறுநர், காவல்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, ஈரோடு. ஐயா, நான் மேலே உள்ள விலாசத்தில் எனது தாய் தந்தையருடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. கோபி கலை அறிவியல் கல்லூரி அருகில் மளிகை மற்றும் ஸ்டேசனரி கடை வைத்துள்ளேன். எனது அப்பா பெரியாகவுண்டருக்கு 7034 ¼ சதுர அடி நிலமும், என் பெரியப்பா பழனிக்கவுண்டருக்கு 6688 ½ சதுரஅடி நிலமும், என்னுடைய பெரியம்மா சுப்பாயாள் மற்றும் அவரது மகள்கள் சரஸ்வதி மற்றும் மரகதமணி ஆகிய மூவருக்கும் சேர்த்து 6688 ½ சதுர அடி நிலமும் நம்பியூர் வட்டம், கரட்டுப்பாளையம் ஆ கிராமத்தில் உள்ள சர்வே எண் 91 ல் இருக்கிறது. இந்த நிலம் விவசாய நிலமாக உள்ளது. இந்த நிலம் பூர்வீக நிலம் என்பதால் கடந்த 2009ம் ஆண்டு பஞ்சாயத்தாரின் முன்னிலையில் பாகக்கறார் செய்துகொண்டார்கள். அதன் பின்பு என் அப்பா பெயரிலும், என் பெரியம்மா சுப்பாயள் பெயரிலும் பட்டா மாறுதல் செய்யாமலேயே இருந்தது. இரண்டு பேருக்குமே வயதாகிவிட்டதால், நான் இருவருக்கும் சேர்த்து 2017ம் ஆண்டில் ஆன்லைன் மூலம் பட்டா மாறுதல் மனு செய்து கூட்டு பட்டா மாறுதல் உத்தரவு பெற்றேன். பட்டா எண் 1082 ஆகும். அப்போது, எங்க கிராம மனியகாரராக திரு.சுபாஷ்குமார் என்பவர் இருந்தார். பட்டா மாறுதல் சம்மந்தமாக அவர் விசாரணை செய்த போதே நான், நிலத்தை பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு நில உரிமை சான்று வேண்டுமென்று சொல்லியிருந்தேன். அப்போது அவர் பட்டா மாறுதல் ஆனவுடன் நில உரிமை சான்றுக்கு மனு கொடுக்க சொல்லியிருந்தார். எனவே நான் பட்டா மாறுதல் ஆனவுடன் கடந்த 25.5.2018ம் தேதி நம்பியூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்ப்பாயத்தில் என் அப்பா பெரியாகவுண்டர் பெயரிலும், என் பெரியம்மா சுப்பாயாள் பெயரிலும் நில உரிமை சான்றுகள் கேட்டு மனு கொடுத்தேன். அதன் பின்பு அந்த மனுக்கள் இரண்டும் சுமார் ஒருவாரத்தில் மணியக்காரர் திரு.சுபாஷ்குமாரிடம் விசாரணைக்கு வந்தது. அப்போது அவர் என்னிடம் ஏற்கனவே பட்டா மாறுதலை சும்மா செய்துகொண்டாய், இப்போது சும்மா செய்ய முடியாது

23.8.18

என்று சொன்னார். அப்போது நான் மளிகைக்கடைதான் வைத்துள்ளேன். எனவே சும்மா செய்துகொடுங்கள் என்று சொன்னேன். அப்போது அவர் என்னுடைய செல்போன் எண் 7010761218 ஐ வாங்கிக்கொண்டார். மேலும் அவருடைய செல்போன் நம்பர் 9578372831 ஐயும் என்னிடம் கொடுத்துவிட்டு புதிதாக இரண்டு டைப்செய்த விண்ணப்பங்களை கொடுத்தார். அதில் தனித்தனியாக மனுதாரர்களிடமும், அருகில் உள்ள பட்டாதாரர்களின் கையொப்பமும் பெற்றுவரச்சொன்னார். நான் அதே போல என் அப்பாவிடமும், என் பெரியம்மாவிடமும், அருகில் உள்ள பட்டாதாரரிடமும் கையொப்பங்கள் வாங்கி அவரிடம் கொடுத்தேன். அப்போது அவர் டைப்செய்த செலவு 200 ரூபாய் என்று சொல்லி வாங்கிக்கொண்டார். அதன் பின்பு அவர் என்னிடம் நில உரிமை சான்றுகள் ரெடியானால் கூப்பிடுகிறேன் என்று சொல்லி அனுப்பினார். ஆனால் கூப்பிடவில்லை. அதன்பிறகு நான் அவருடைய அலுவலகத்திற்கு ஐந்தாறு முறை சென்று பார்த்து கேட்டேன். அப்போதெல்லாம் அவர் சும்மா வேலையாகாது என்று மட்டும் சொன்னார். நான் வசதி குறைவானவன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இது சம்மந்தமாக அவரிடம் நான் போனிலும் பேசியுள்ளேன். அப்போதெல்லாம் அவர் நேரில் வரச்சொல்லி மட்டும் தான் சொல்வார். நேரில் செல்லும்போது சும்மா வேலையாகாது என்று மட்டும் சொன்னார். எனவே நான் கடந்த 14.8.2018ம் தேதி நம்பியூர் தாலுக்கா அலுவலகத்திற்கு போய் விசாரித்தேன். அங்கிருந்த ஒரு பெண் கிளார்க் என்னிடம் நில உரிமை சான்றுகளை மணியக்காரர் சுபாஷ்குமார் ஏற்கனவே வாங்கிக்கொண்டு போய்விட்டதாக என்னிடம் சொன்னார். அதனால் நான் என்னுடைய செல்போனில் இருந்து மணியகாரரின் செல்போனுக்கு பகல் சுமார் ஒரு மணிக்கு தொடர்புகொண்டு பேசினேன். அப்போது அவர் நம்பியூர் புளியம்பட்டி ரோட்டில் உள்ள மணியகாரர் ஆபீசுக்கு வரச்சொன்னார். நான் நேரில் சென்று அவரை பார்த்தேன். அப்போது அவர் தான் பணிமாறி அந்த அலுவலகத்திற்கு சென்றுவிட்டதாகவும், நில உரிமை சான்றுகள் அவரிடம் உள்ளதாகவும் சொல்லி என்னிடம் 20ஆயிரம் ரூபாய் பணம் கேட்டார். அப்போது நான் அவரிடம் சார், நான் வசதி குறைவானவன் என்று சொன்னேன். அதற்கு அவர், சான்றுகளை தாலுக்கா அலுவலகத்தில் செலவு செய்து வாங்கி வந்ததாகவும், அதனால் பணத்தை ரெடிபண்ணி கொண்டு போனில் பேசச்சொன்னார். அதன்பிறகு நான் கடந்த 18.8.2018 அன்று பகல் சுமார் 12.20 மணிக்கு மீண்டும் என்னுடைய செல்போனில் இருந்து அவருடைய செல்போனுக்கு தொடர்புகொண்டு பணம் ரெடிபன்ன முடியவில்லை என பேசினேன். அப்போது அவர் ஆபீசுக்கு வரச்சொன்னார். நான் மீண்டும் அவருடைய ஆபீசுக்கு போனபோது அவர் என்னிடம் 20 ஆயிரம் ரூபாய் ரெடிபன்னி கொடுத்துவிட்டு சான்றுகளை வாங்கிக்கொள் என்று சொல்லி அனுப்பினார். அதன் பிறகு 20.8.2018ம் தேதி பகல் சுமார் 2.30 மணிக்கு செல்போனில் அவரிடம் பணம் ரெடிபன்ன முடியவில்லை என்று பேசினேன். அப்போது அவர் நாளைக்கு வா பார்க்கலாம் என்று

23.8.18

சொன்னார். நான் 21.8.2018ம் தேதி பகல் சுமார் 12 மணிக்கு அவருடைய ஆபீசுக்கு போனேன். கொஞ்ச நேரம் காத்திருந்தேன். எல்லோரும் சென்ற பின்பு என்னை தனியாக வைத்துக்கொண்டு சுமார் ஒரு மணிக்கு என்னிடம் பணம் என்னாச்சு என்று கேட்டார். என்னால் ரெடிபன்ன முடியவில்லை, 2ஆயிரம் தான் உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் நீயே உன்னால் முடியும் தொகையை குறைத்துச்சொல்லு என்று சொன்னார். நான் என்னால் 5 ஆயிரம் வரைதான் புரட்ட முடியும், அதுவும் இன்றைக்கு முடியாது என்று சொன்னேன். அப்போது அவர், சரி 7 ஆயிரம் மட்டும் வெள்ளிக்கிழமை கொடுத்துவிட்டு நில உரிமைசான்றுகளை என்னிடம் வாங்கிக்கொள் என்று கண்டிப்பாக சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கு எங்க கிராம முன்னால் மணியக்காரர் மற்றும் தற்போது நம்பியூர் கிராமத்திலிருக்கும் சுபாஷ்குமார் மணியக்காரருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து என் அப்பா பெயரிலும், என் பெரியம்மா பெயரிலும் நில உரிமை சான்றுகள் பெற விருப்பம் இல்லாததால் இந்த புகாரினை கொடுக்கிறேன். sd xxxxxxx (SAKTHIVEL.P) 23.8.18

Sir, Received the complaint on 23.8.18 at 14.30 Hrs and the complaint was sent to DVAC by mail requesting a Preliminary Enquiry XXXXXX (Sd) M.Natarajan, 23.8.18, Inspr, VAC, Erode.

Sir, As per instruction given in DVAC Memo PE 250/18/REV/ER Dt.23.8.18, Registered a PE vide Erode detachment Si.No. 4/18 on 23.8.18 and took up for Enquiry XXXXXX (Sd) M.Natarajan, 23.8.18, Inspector of Police, V&AC, Erode.

Sir,

During Preliminary Enquiry, the allegation mentioned in the complaint was verified and found to be genuine. Demand of illegal gratification was conformed through sources. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.4/AC/2018 u/s 7 of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 19.00 hrs today on 23.8.18 and took up for investigation.

Original FIR along with the original computer type written complaint of Tr.P.Sakthivel, S/o.Periyagounder, 11/250-KovilKattuthottam, Karappadi, Karattupalayam 'B' Village, Nambiyur TK, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

23.8.18

(M.NATARAJAN)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode-3.